யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2710- எஸ்ஆர்ஜ (சாதாரண செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2711- எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) (விசேட செயற்பாடுகள்) இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை மற்றும் வட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள வடக்கு மாகாண சபை ஊடாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாவுள்ளது. செயற்திட்டப் பகுதியில் வசிப்பவர்களிற்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவது மற்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் நீர் வளங்களை முகாமை செய்வதும் பாதுகாத்தலும் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கீழ் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,474.59 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.45 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,541.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 76.45 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 5,363.04 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியன் பிரான்கைஸ்டி அபிவிருத்தி முகவர் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா 2,569.79 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2020 திசெம்பர 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று

ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தினதும் கடன்வழங்கும் முகவர்களிதும் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்பிற்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட ரூபா 131.04 மில்லியன் மற்றும் ரூபா 20.77 தொகையான முறையே வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் என்பன நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்தால் வேண்டப்பட்டவாறு, ஒப்பந்த அடிப்படையில் செயற்திட்டத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட ஊழியர்களிற்காக செயற்திட்டத்தால் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியங்களிற்கான நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 76.45 | 8,541.76 | 1,670.30 | 10.96 | 1,670.26 | 28.55 | 4,100.87 |
| ஏஎவ்டி | 48.00 | 5,363.04 | - | - | - | 0.96 | 124.64 |
| இலங்கை அரசாங்கம் | 23.00 | 2,569.79 | 69.80 | 0.46 | 69.75 | 4.76 | 666.36 |
| மொத்தம் | 147.45 | 16,474.59 | 1,740.10 | 11.42 | 1,740.01 | 34.27 | 4,891.87 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 16,474.59 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.45 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கிய திகதியிலிருந்து 06 ஆண்டுகளும் 10 மாதங்களும் கடந்த பின்னர் 2017 திசெம்பர் 31 வரை ரூபா 4,891.87 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 34.27 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்நதது.

(ஆ) யாழ்ப்பாண மாநகர பகுதிக்கு புதிய நீர்த்தேக்க ஏற்ற நிலையம், சுத்திகரிப்பு பொறிகள், இரணைமடு குளத்தில் நீரிறைத்தல் நிலையம் மற்றும் நிலத்தடி நீர் வழங்கலும் குழாயிடலும் மற்றும் பிரதான சுத்திகரித்த தண்ணீர் பரிமாற்றம் என்பவற்றின் நிர்மாணத்திற்காக ஐ.அ.டொலர் 48 மில்லியன் வழங்குவதற்கு 2011 திசெம்பர் 31 இல் இலங்கை

அரசாங்கத்துடன் பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவால் புறம்பான கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2015 ஒக்தோபர் 06 இல் இரத்துசெய்யப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

மேற்குறிப்பிடப்பட்ட 3.1 (ஆ) ஆம் பந்தியின் பிரகாரம், யாழ்ப்பாண தீவுப்பகுதிக்கான பிரதான நீர் வளமாக இரணைமடு குளத்தினை பயன்படுத்துவதால் இரணைமடு குளப் பகுதியில் வசிக்கின்ற சமூகத்தினரின் வலுவான எதிர்ப்புக் காரணமாக செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், யாழ்ப்பாண குடா நாட்டில் வசிக்கிற்ன மக்களின் தண்ணீர் தேவைகளை நிரப்புவதற்கு கடல் தண்ணீரை பாவிப்பதற்காக செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மாற்றுவதற்கு 2015 யூலை 15 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் அமைச்சரவை தீர்மானித்தது. ஆகவே, 2017 திசெம்பர் 15 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை அரசாங்கத்தால் 3603 எஸ்ஆர்ஜ மற்றும் 3604 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க புதிய கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 24.91 சதவீதமாக இருந்தது.

### 3.3. ஒப்பந்த நிர்வாகம்

பிரதான சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பரிமாற்றம்- பொதி 01 இன் வழங்கல் மற்றும் குழாயிடலிற்கான ஒப்பந்தம் ரூபா 2,646 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2016 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 யூலை மாதத்தில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறயினும், ஒப்பந்தகாரர் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட மதிப்பிடப்பட்ட 42.8 கிலோமீற்றர் நீளத்தில் 24.7 கிலோமீற்றர் குழாயிடல் வேலைகள் மாத்திரம் பூர்த்திசெய்திருந்தார். மேலும், 11 கிலோ மீற்றர் அமுக்க பரிசோதனை வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ரூபா 2,890 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2016 இல் வழங்கப்பட்ட பிரதான சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பரிமாற்றம்- பொதி 02 இன் வழங்கல் மற்றும் குழாயிடலிற்கான ஒப்பந்தத்தின் கீழ் 107.76 கிலோ மீற்றர் குழாய்கள் குழாயிடல் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 144 கிலோமீற்றர் நீளமான குழாய்கள் குழாயிடல் வேலைகள் பூர்த்தியாக்கப்பட வேணடுமென மதிப்பிடப்பட்டவற்றில் 2018 யூலையில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. மேலும், 46.15 கிலோ மீற்றர் அமுக்க பரிசோதனை வேலைகள் 2018 யூன் 15 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 3.4. சர்ச்சைக்கரிய தன்மையான விடயங்கள்

நாவற்குழி தண்ணீர் கோபுரம் மற்றும் அலுவலக கட்டிடத்திற்கான காணி சுவீகரிப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2014 யூன் 11 இல் ரூபா 3.45 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சுவீகரிக்கப்பட்ட காணியின் உரிமையாண்மை 2017 திசெம்பர் 31 வரையும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.5. நிதிக்கட்டுப்பாடு மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்காததுடன் 2016 யூன் 10 ஆந்திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு உள்ளக கணக்காய்வாளரொருவர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.